**செய்திக் குறிப்பு: 89** **11.6.07**

தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் இரண்டாவது கூட்டம் இன்று (11.06.2007) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலர், செயலர், நிதித்துறை, செயலர், ஊரக வளர்ச்சித் துறை, இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, பாராளுமன்ற உறுப்பினர் திரு.என்.எஸ்.வி. சித்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வி. பாலபாரதி, திரு. சுந்தரம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 25.11.2006 அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புகள், திட்ட நிதி பயன்பாடு ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த ஆட்சியில் இந்த திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களில் சுமார் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் 13.05.2006க்குப் பிறகு இந்த ஓராண்டு காலத்தில் இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 280 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது என்றும் மொத்தம் 3 கோடியே 45 இலட்சத்து 11 ஆயிரம் மனித வேலை நாட்கள் இந்த ஓராண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80ஐ வழங்குவதற்கு ஏதுவாக இத்திட்டத்திற்கென தனியான விலைப்பட்டியலை இந்த அரசு அறிவித்துள்ளது. இதனால், இத்திட்டத்தின் கீழ் தற்போது ஊதியமாக ஒரு நபருக்கு ரூபாய் 80 வீதம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும், ஏற்கனவே இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களோடு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

Issued by:
DIPR, CHENNAI – 9.